Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி ௴ 12 உ புதன்கிழமை (26 6-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 203

# யுத்த உத்தி ஆவணங்கள் குண்டு வெடிப்பினால் நாசம்!

## கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தை இரகசிய இடத்தில் அமைக்க முயற்சி

கொழும்பு, ஜூன் 26

ஸ்ரீலங்கா கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைப் படையின் குண்டுத் தாக்குதலில், அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு யுத்த உத்திகள் உள்ளடங்கிய முக்கிய ஆவணங்கள், போர் உபாய வரைபடங்கள் மற்றும் இரகசியத் தகவல்களைக் கொண்ட தஸ்தாவேஜுக்கள் என்பன முற்றாக அழிந்து போய்விட்டன.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி, கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டது.

இதனிடையில் —

இரகசிய இடம் ஒன்றில் புதிதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தை அமைத்து, வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ கொமாண்டர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்படி பாதுகாப்பு அமைச்சுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதலின் போது பிரிகேடியர் இலக்டரணகம படுகாயமடைந்தார் என்றும் —

அச்சமயம் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் இருந்த பிரிகேடியர் தயா விஜேசேகரா மயிரிழையில் உயிர்தப்பினார் என்றும் தெரியவருகிறது. (உ-எ)

## இராணுவ நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கில் குறைப்பு?

கொழும்பு, ஜூன் 26

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் ஆயுத படையினர் பலர் கொல்லப்பட்டதை அடுத்து வடக்கு கிழக்கு பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று கொழும்பில் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் மீது நடத்திய வர்கன குண்டுத் தாக்குதலை அடுத்து இராணுவம், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தனது தாக்குதலை முற்றிலும் நிறுத்தி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டுவெடித்ததும் கூரை பறந்தது! துண்டு துண்டாக சடலங்கள் உள்ளே வந்து வீழ்ந்தன!!

### உயிர்தப்பிய பிரிகேடியர் தகவல்

கொழும்பு, ஜூன் 26

கூட்டுப்படைத் தலைமையக வாசலில் குண்டு வெடித்ததும் தலைமையகத்தின் கூரை பறந்தது.! பின்னர் கூரை ஊடாக மனித சடலங்கள் துண்டு துண்டாக உள்ளே வந்து விழுந்தன.!!

—இவ்வாறு கூறினார் பிரிகேடியர் தயா விஜேசேகரா. குண்டு வெடித்த சமயம் தலைமையகத்துக்குள் சிக்கிக் கொண்ட இவர், மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

"இந்தக் குண்டுத் தாக்குதல் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்ட பெரும் அவமானம்" என்று அமைச்சர் ஒருவர் இராணுவத் தளபதியிடம் நேரில் கூறினார் என்றும் —

குண்டுத் தாக்குதலினால் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் 15 கோடி ரூபாவுக்கு அதிகம் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் —

கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## கொழும்பு குண்டுவெடிப்பில் நீல நிற நிஸான் பிக்கப்!

### புலன் விசாரணையாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 26

கூட்டுப்படைத் தலைமை அலுவலகக் குண்டு வெடிப்பு தொடர்பாக கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வசித்து வந்த 30க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களை பொலீஸார் விசாரணைக்காக கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நீல நிற நிஸான் பிக்கப் வாகனத்தின் தொடர் இலக்கத்தை புலன் விசாரணையாளர் கண்டுபிடித்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை விசாரணை: முகம் வீங்கிய நிலையில் முருகன் நீதிமன்றில் ஆஜர்!

ராஜீவ் படுகொலை தொடர்பாக தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட முருகன் (வயது 18) என்ற சாவகச்சேரி வாசி அண்மையில் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் வடிவேல் இரத்தினம் முன் ஆஜர் செய்யப்பட்டார். அவருக்கு எதிராக வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

கட்டையான, திடகாத்திரமான உடலமைப்பையும் மொட்டைத் தலையையும் கொண்ட முருகன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரது முகம் வீங்கிக் காணப்பட்டது.

இவருடன் சேர்த்து கைதான பொருளாதாரப் பட்டதாரியும் இந்தியப் பெண்ணுமான நளினி (வயது 27) என்பவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர அங்கத்தவரான முருகன் முக்கிய பங்கு வகித்தார் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 26

கல்வித் திணைக்களம் நடத்தும் பல்வேறு பரீட்சைகளை இம்மாதமும் அடுத்த மாதமும் யாழ். மாவட்டத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கொழும்பில் எடுத்துக் கொண்ட முயற்சிகளை அடுத்தே முக்கிய சில பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

கல்விச் சேவை அதிபர் தரம் I, II, III, ஆகியவற்றுக்கான பரீட்சைகளும் —

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்பா.... துதர்மாரிட்டை ரியூஷன் எடுக்கினம் போலை....!

## சர்வகட்சி தலைவர்களுக்கு சுவிஸ் அரசமைப்புக் குறித்து தூதுவர் விளக்கமளித்தார்

கொழும்பு, ஜூன் 26

சுவிட்ஸர்லாந்து நாட்டில் செயற்பட்டு வரும் "கன்ரோன்" அரசியல் அமைப்பு முறை பற்றிய விபரங்களை இலங்கையிலுள்ள சுவிஸ் தூதுவர் சர்வகட்சித் தலைவர்களுக்கு கடந்த வார இறுதியில் விளக்கிக் கூறினார்.

பல்வேறு சிறுபான்மை இனங்கள் தங்களுக்கு இடையேயும், பெரும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## லங்கா சிறியில் 290 தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கடந்த ஞாயிறன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லங்கா சிறி' கப்பலில் குடாநாட்டுக்கான 290 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றுள் வெளிநாட்டுத்தபால்களும் அடங்கி உள்ளன.

இன்று விடுமுறை தினமாதலால் தபால்களை தரம் பிரிக்கும் வேலைகள் நாளையே ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## பெருமளவு பயணிகள் வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 26

வவுனியா மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து பெருமளவில் பயணிகள் நேற்று அதிகாலை யாழ். வந்து சேர்ந்தனர். (இ-5)

## கரை ஒதுங்கிய சடலம்

குருநகர், ஜூன் 26

மண்டைதீவுக் கரையில் அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியதாகக் கூறப்படுகிறது. இச் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. (உ-51)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தில் சின்னையா மகேஸ்வரி (வயது 56) என்ற பெண் காயமடைந்தார். (இ-15)

## படையினர் சூடு!

நச்சன்காடு இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு தெல்லிப்பளை அம்பனையில் ஓர் இளம்பெண் இலக்கானார்.

நேற்றுக்காலை பதினொரு மணி அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அம்பனையைச் சேர்ந்த சின்னத்துரை துவாரகா (வயது 18) என்பவரே காயமடைந்தவராவார். (இ-15)

# இந்தியா சம்பந்தப்படாமலே ஈழம் உருவாகும் சாத்தியம்!

### முன்னாள் வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரன் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 26

"இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு தொடர்பாக இந்திய அரசாங்கம் அடிக்கடி பிரகடனப்படுத்தும் கட்பாடு தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்துக்குப் பெரும் ஆசீர்வாதமாக இருக்கும்.

ஆனால் எதிர்காலத்தில் இந்த நிலைப்பாடு மாறக்கூடும். அந்த வகையான மாற்றங்கள் ஏற்படுகின்ற போது...

இந்தியா மேலதிகமாக எதையும் செய்யாமலேயே — நேரடியாக எதுவிதத்திலும் சம்பந்தப்படாமலேயே — ஈழம் உருவாகி விடலாம்."

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன்.

கடந்த வாரம் கொழும்பில் தங்கியிருந்தபோது அவர் அங்கிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியிலேயே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

பேட்டியின் சில முக்கிய பகுதிகளின் சாராம்சம் வருமாறு:-

★ ஸ்ரீலங்கா அரசும், புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதானால் இரு தரப்பாரும் முன் நிபந்தனை விதிக்காமலேயே பேச வேண்டும்.

★ சமஷ்டி அமைப்பு முறையொன்றையே தாங்கள் விரும்புவதாக விடுதலைப் புலிகள் கூறுவார்களேயானால், அது விடயத்தில் எந்தளவு தூரத்துக்கு நகரலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குரியது.

★ 1987இல் செய்யப்பட்ட இலங்கை — இந்திய (ராஜீவ்-ஜே. ஆர்.) ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் உள்ள ஏற்பாடுகளை விடக் குறை

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் முற்றிலும் சீலிங் அடித்த, நான்கு அறைகள் கொண்ட ஒரு நவீன வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: இல. 324, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (17332)

### மணமகன் தேவை

சைவபோசன, அரசினர் பாடசாலையில் பட்டதாரி ஆசிரியையாகவுள்ள 28 வயதுப் பெண்ணுக்கு தகுந்த அர்சாங்க அல்லது வங்கியில் தொழில் புரியும் உத்தியோகத்தர் தேவை. உதயத்தில் செவ்வாய் உண்டு. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு இல. 323, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17325)

### மணமகள் தேவை

வயது 29. U. K இல் கம்பியூட்டர் தொழில் நுட்பம் பூடித்த மணமகன். நட்சத்திரம் சதயம். வந்து விவாகம் செய்து கூட்டிப் போவார். தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (17318)

### மணமக்கள் தேவை

30 வயது கணக்காளர், வந்து விவாகம் செய்து கூட்டிப்போவார். நட்சத்திரம் கார்த்திகை 2ஆம் பாதம். அழகான பெண் தேவை. 29 வயது விரிவுரையாளர் எம். எஸ். ஸி. படிப்பதற்கு U. K. செல்ல இருக்கும் மணமகன் நட்சத்திரம் அத்தம். தொடர்பு: ABCDE விவாகப் பெருத்நனர், 328, நாவலர் றோட். ஆனைப்பந்தி. (17317)

### பணிப்பெண் தேவை

நான்கு பேர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு உதவிக்கு 15 வயதிற்குட்பட்ட ஒரு பணிப்பெண் தேவை. தொடர்பு: இல: 325, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [17333]

### புதிய புத்தகம்

படித்துவிட்டீர்களா? ''Tho Sparks'' (A Collection of Ten Short Stories By-A, Santhan) விலை: ரூ. 20/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (4165)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூட்டர் என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/0170]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (4163)

**உள்ளூரில் உற்பத்தி விடுதலைக்கு உயிர்நாடி.**

## பௌர்ணமிவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 26
சச்சேரி கிழக்கு சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் பௌர்ணமி தின விழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (த)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
சுன்னாகம், மயிலணி கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை [30 ஆம் திகதி] காலை 9 - 45 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கும்பாபிஷேகத்தையொட்டி கிரியைகள் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும். [அ - 89 - 2]

## கலந்துரையாடல்

புளியங்கூடல், ஜூன் 26
தீவகப் பகுதியில் உள்ள பத்திரிகைச் செய்தியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில், தீவக மக்கள் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்றது.

தீவகப் பொறுப்பாளர் திரு. சுதா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இப்போதைய யுத்தச் சூழ்நிலையில் பத்திரிகைச் செய்தியாளர்களின் பணி குறித்துப் பயனுள்ள விதத்தில் கலந்துரையாடப்பட்டது. [அ-125]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 12 — 3 — 1978



அரவத்தின் பிடியில்: 26 — 6 — 1987

### செல்வி தீபா

(இராமநாதன் கல்லூரி மாணவி)

**திதி: 26-6-1991**

எமக்கு ஒளி விளக்காய்த் திகழ்ந்த இரண்டாவது மகளாகிய தீபாவே! எதிர்பாராத விதத்தில் அரவத்தினால் கடியுண்டு எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்று ஆண்டுதான் நான்காகப் போனாலும், உன் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காதம்மா! உம் பிஞ்சு முகமும், பௌர்ணமி முழு நிலவின் முகமும் எங்கள் கண் முன்னே நிற்கின்றதம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கைகளினால் இன்றும் பூப்போட்டு பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அப்பா, அம்மா, அக்கா,
தங்கை, தம்பிமார்.

வெள்ளைக் குட்டி, கராஜ்,
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம். (17329)

## முக்கிய அறிவித்தல்

### இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இறுதி வருட பரீட்சையில் ஆடிமாதம் 20 ஆம் திகதி தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் உடனடியாக 26-06-1991 கல்லூரியில் அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்.

பதிவாளர்,
L. A. M. C.

பின் குறிப்பு: சமுகமளிக்கத் தவறின் அனுமதிப்பத்திரம் கிடைக்கமாட்டாது. [17335]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னையா சத்தியகாந்தன்

தோற்றம்:
14 - 2 - 1971

மறைவு:
7 - 7 - 1990

திதி:
26 - 6 - 1991

செல்வனை நினைவுகூரும்:
குடும்பத்தினர்

கைலாயர் வளவு,
கைதடி தெற்கு. (17314)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| | அ. வசந்தகுமார் [பெரியதம்பி] | அ. அசோக்குமார் [ராசு] | அ. உதயகுமார் [தேவா] | அ. சுரேஷ்குமார் [மாந்து] | அ. செல்வகுமார் [குண்டு] |
|---|---|---|---|---|---|
| தோற்றம்: | 30 - 11 - 1976 | 18 - 03 - 1978 | 17 - 01 - 1980 | 04 - 02 - 1982 | 17 - 04 - 1984 |



| | கோ. டெனான் (திலிப்) | கோ. டெலான் (தீபன்) | சி. கோமஸ்குமார் (கோமர்) |
|---|---|---|---|
| தோற்றம்: | 06 - 05 - 1986 | 23 - 07 - 1983 | 09 - 11 - 1954 |

**மறைவு: 26 - 06 - 1990**

எங்கள் அன்புத் தீபச் சுடர்களே
இன வெறியரின் அழிப்புக்கிலக்காகி
எட்டுப் பேரும் எங்களை விட்டுப் பிரிந்து
ஒரே புதை குழியில் சங்கமமாயினீர்
நீங்கள் நாட்டுக்காக மடிந்திருந்தால்

எங்கள் மனம் ஆறிடுமடா – ஆனால்
நீங்கள் மொட்டாகி மலருமுன்னே
அந்நியன் அழித்து விட்டான்
எங்கள் அன்புச் செல்வங்களே
நீங்கள் சாகவில்லை சரித்திரமாகிவிட்டீர்கள்

**இன வெறியரின் ரொக்கட் குண்டு வீச்சில் சிக்கி அநியாயமாக பலியான இளம் மொட்டுகள்**

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[17343]

உங்கள் பிரிவால் துயர் கொள்ளும்:
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றம் பலன் தர...

கடந்த வாரத்தில், கொழும்பில் கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பு, பல அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் என்று அரசியல் நோக்கர்கள் ஆருடம் தெரிவிக்கத் தொடங்கி உள்ளனர்.

ஆனால் சென்ற கிழமையிலேயே குறிப்பிடக் கூடிய அரசியல் திருப்பம், மாற்றம் நிகழ்ந்ததாக நெதர்லந்து வானொலியின் அரசியல் விமர்சகர் தகவல் வெளியிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கக் கூடியதான சமஷ்டி அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்குச் சம்மதிக்கும் அளவுக்குச் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வந்துள்ளது என்பதே அந்தத் தகவலாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு திட்டவட்டமான யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் ஒரு தீர்வை — சொந்த யோசனைகளை — முன் வைத்தால் மட்டுமே தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் என்பது சுதந்திரக் கட்சியின் நீண்ட கால வாதம். அது அரசியல் லாபம் கருதிய ஒன்று, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று உருவாகாமல் தடுக்கும் தந்திரம் என்று இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் கூறியிருந்தோம்.

தமிழர்களுக்கு ஏற்பட்ட அனுபவமும் அதுவே. ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் தமது சொந்த அரசியல் லாபம் கருதி, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று சாத்தியமாகாமல் தடுத்து வந்தமை இந்த நாட்டின் சாபக்கேடு நிறைந்த சரித்திரம்; தரித்திரமும் கூட.

1957 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் இந்த நாட்டில் ஒரு சமஷ்டி அரசியல் முறையைத் தோற்றுவிக்கக் கூடிய கருவாக இருந்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் சிங்களப் பேரினவாதமும் சேர்ந்து அதனை முளை கொள்ளாமலே கருவில் அழித்துப் புதைத்தன. இறுதியில் பண்டாரநாயக்காவையே சுட்டுக் கொன்று புதைத்துவிட்டன.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தால் நாட்டில் இத்தனை பேரழிவும், சீரழிவும், பின்தள்ளலும், மனிதக் கொடுமைகளும் இடம்பெற்றிருக்கமாட்டா. சிங்களவரும், தமிழரும் ஒருவருக்கு மற்றவர் பரம எதிரிகளாகி, இரு துருவங்கள் ஆகியிரார்.

தமிழர்கள் தமக்கென்று தனியாட்சி, தனியரசு இல்லாமல் வேறு எதனையும், எந்த அற்ப சொற்பத்தையும் ஏற்கமாட்டார்கள் என்பதை சுதந்திரக்கட்சி இப்போதாவது உணர்ந்துவிட்டது என்றால் அது பெரும் திருப்பம் தான்; மாற்றம்தான்.

ஆனால் அதே போல, ஐக்கிய தேசியக் கட்சியும், சிங்களப் பேரினவாதமும் உணரவில்லையானால், சுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட மாற்றத்தால் பயனில்லை.

ஆனால் - தமிழர்களின் ஆயுத பலத்தையும், அதற்கு அத்திவாரமான மனோ வலிமையையும், தியாக உணர்வையும் தப்புக் கணக்குப் போட்டு-

தமிழர்களுக்குத் தனியரசு உரிமை வழங்க சிங்கள அரசும், சிங்களப் பேரினவாதமும் இனியும் தயக்கம் காட்டினால், இலங்கை விரைவில் இரு நாடுகளாவதைத் தவிர்ப்பதோ, தடுப்பதோ கடினமாகிவிடும்.

### எதிரணியில் வெற்றிபெற்ற

## சாத்தூர் இராமச்சந்திரன் மீண்டும் அ.தி.மு.கவில்!

சென்னை, ஜூன் 26

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும் - ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவிலிருந்து பிரிந்து சென்று அதிருப்திக் குழுவில் போட்டியிட்டவருமான - திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மீண்டும் ஜெயலலிதா தலைமையை ஏற்று அ. தி. மு. கவில் சேர்ந்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் திருநாவுக்கரசு தலைமையிலான அண்ணா புரட்சித் தலைவர் தமிழ் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் - தி. மு. க ஆதரவுடன் - இராமச்சந்திரன் சாத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

இந்தக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் திருநாவுக்கரசு அறந்தாங்கித் தொகுதியில் இருந்து வெற்றிபெற்றிருந்தார்.

திரு. இராமச்சந்திரன் கட்சி மாறியதைத் தொடர்ந்து புதிய சட்டசபையில் எதிர்க்கட்சி எம். எல். ஏக்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைந்தது.

ஏற்கனவே சென்னை துறைமுகம் தொகுதியில் இருந்து தெரிவான தி. மு. க. தலைவர் கருணாநிதி தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

### ஜி. சி. ஈ. (சா.த) பரீட்சை:

## விண்ணப்ப படிவங்கள் இங்கு எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 26

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள 1991 ஜி. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்களை சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும் நாளை யாழ். கல்வி அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறும்—

பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக தத்தமது பாடசாலை விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பிவைக்குமாறும்—

யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (உ-5)

## ஷெல் தாக்குதல்

நேற்று மாலை 6. 30 மணிக்கு ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ-15)

## யாழ்ப்பாணத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையும்—

ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சை, தாதியர் பரீட்சை ஆகியவையுமே யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதியும், கல்விச் சேவை அதிபர் தரம் III இற்கான பரீட்சை 3 பரீட்சை நிலையங்களில் ஜூலை 6 ஆம் திகதியும் நடைபெறும்.

இந்தப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை விண்ணப்பதாரர்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை—

கல்விச் சேவை அதிபர்கள் தரம் I, II இற்கான பரீட்சைகள் 7 பரீட்சை நிலையங்களில் ஜூலை 14 ஆம் திகதியும்—

ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சை, தாதியர் பரீட்சை ஆகியவை ஒவ்வொன்றும் ஐந்து பரீட்சை நிலையங்களில் அடுத்த மாதமும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-5)

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது போன்று தெரிவதாக புலிகளுக்கு எதிரான தமிழ் இயக்கம் ஒன்று கூறியதாக ஏ. எவ்.பி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

நாட்டின் வேறு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களின் மீதும் இதுபோன்ற தாக்குதல் நடத்தப்படலாம் என்றாலும்—

அதனால் தாங்கள் எச்சரிக்கையாக இருப்பதாகவும் பாதுகாப்பு துணை அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ கூறியுள்ளார். (உ-எ)

## இந்தியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வானதே.

★ புலிகளைத் தவிர ஏனைய தமிழ்க் குழுக்களில் ஏதாவது ஒன்று கணக்கில் எடுக்கப்படக் கூடியதாக இருக்கிறதா என்பதை எவராவது நேர்மையுடன் கூற முடியுமா?

★ இலங்கையின் சனத்தொகையில் 25 சத வீதமானோர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் போது அதனை அடக்குவது சுலபமானதல்ல.

★ ராஜீவ் காந்தி கொலை போன்ற சம்பவத்தை, தேவைக்கு அதிகமாக மிகைப்படுத்தி விவகாரங்களைப் பார்க்கக் கூடாது.

— ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருக்கிறது என்று எண்ணி நிலைமைகளை அளவுக்கு அதிகமாகப் பெரிதுபடுத்தவும் கூடாது. (அ)

## சுவிஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான்மை இனத்தவருடனும் சம உரிமைகள் பெற்று, சுயாட்சி முறையிலான நிர்வாகத்தில், அரசியல் பிரச்சினைகளின்றி, வாழ்ந்து வரும் ''கன்ரோன்'' அமைப்பு முறை, சுவிஸில் வெற்றிகரமாக அமுலில் இருந்து வருகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியாகவே இந்தக் ''கன்ரோன்'' முறை பற்றிய தூதரின் விளக்கத்தை சர்வகட்சித் தலைவர்கள் கேட்டறிந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயர்கல்வி, நீதித்துறை அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் தலைமையில் அவரது அமைச்சு அலுவலகத்தில் இந்த விளக்கமளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் திரு. பிரட்மன் வீரக்கோன் உட்பட பல கட்சிகளின் தலைவர்கள் விளக்கங்களைக் கேட்டறிந்தனர்.

சுவிஸ் தூதரின் கருத்துகள் பதிவு செய்யப்பட்டன.

யூகோஸ்லேவியாவில் உள்ள அரசமைப்பு முறை குறித்து அந்த நாட்டின் தூதுவர் தரும் ஆலோசனைகள் பிறிதொரு கூட்டத்தில் அவதா[illegible] கப்பட்டது. (உ)

### இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

டொனால்ட் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று ஜொனியன்ஸ் அணி நொதேண் அணியை எதிர்த்து விளையாடும். இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

## ரணிலின் வீடும் சேதம்

கொழும்பு ஜூன் 26

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையலுவலக குண்டு வெடிப்பின் போது அருகிலிருந்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் வீடும் பலத்த சேதமடைந்தது.

### கொக்கட்டிச்சோலைக் கொடூரம் :

## 56 பேரின் சடலங்களை நாங்களே புதைத்தோம்!

### கிராமவாசிகள் நேரில் சாட்சி

கொழும்பு, ஜூன் 26

கொலைகள் நடந்த இடத்தில் இராணுவத்தினரின் பணிப்பின் பேரில், நாம் நால்வர் மட்டும் 56 பேரின் சடலங்களை குழிக்குள் போட்டுப் புதைத்தோம்.

— இவ்வாறு கொக்கட்டிச்சோலைக் கிராம வாசிகள் நால்வர், மகிழடித் தீவுக்குச் சென்றிருந்த பிரதமர் விஜேதுங்கா தலைமையிலான குழுவிடம் நேரில் தெரிவித்திருக்கின்றனர்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் சம்பந்தமாக நேரில் கண்டறிவதற்கு பிரதமர் தலைமையிலான அதிகாரிகள் குழு இம்மாதம் 15 ஆம் திகதி மட்டக்களப்புச் சென்றிருந்தது.

சம்பவம் நடந்த கொக்கட்டிச்சோலைக்குச் செல்வதற்குப் படையினர் பிரதமர் குழுவுக்கு அனுமதி அளிக்கவில்லை. அதனால் குழுவினர் மட்டக்களப்பிலும், கொக்கட்டிச்சோலைக்கு அருகில் உள்ள மகிழடித்தீவிலும் தரித்து நின்று தகவல் அறிந்தது தெரிந்ததே.

பிரதமருடன் சென்ற குழுவில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா, பிரட்மன் வீரக்கோன், வால்டர் பெர்னாண்டோ, லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஆகியோர் அடங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மகிழடித்தீவைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியை ஒருவர் தாம் படையினரால் தாக்கப்பட்டதை தமது முதுகில் ஏற்பட்ட காயங்களைக் காண்பித்து ருசுப்படுத்தினார். (அ)

### கொழும்பு குண்டு வெடிப்பில்

## யாழ் கொமாண்டரும் அமைச்சரும் தப்பினர்!

கொழும்பு, ஜூன் 26

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பின் போது தகவல் துறை துணை அமைச்சர் ஏ. கே. ரணசிங்காவும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் யாழ். கொமாண்டர் பிரிகேடியர் விஜய விமலரட்னாவும் மயிரிழையில் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த தினம் காலை 9. 50 மணிக்கு றெட் அவெனியூவில் உள்ள தனது வீட்டிலிருந்து அலுவலகத்துக்குப் புறப்பட்ட அமைச்சர் ரணசிங்க சரியாக 9. 58 மணிக்கு கூட்டுப்படை தலைமையகத்தைத் தாண்டிச் சென்றார்.

''எனது வாகனம் கூட்டுப்படைத் தலைமையகத்தைத் தாண்டும் போது தலைமையகச் சுவருக்கு வெளியே நின்ற ஒரு மனிதர் வித்தியாசமான முறையில் யாருக்கோ சமிக்ஞை செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். எனது வாகனமும், பின்னால் வந்த வாகனமும் தலைமையகத்தைத் தாண்டி சில செக்கன்களில் குண்டு வெடித்தது.

குண்டை வெடிக்க வைப்பதற்கான சமிக்ஞையைத் தான் அந்த மனிதர் காட்டியிருக்க வேண்டும் என்று நான் இப்போது நினைக்கிறேன்''—இப்படி அமைச்சர் சொன்னார்.

கூட்டம் ஒன்றில் பங்கு ஏற்றுவதற்காக தனது வாகனத்தில் கூட்டுப்படை தலைமையகத்தை நோக்கி பிரிகேடியர் விமலரட்னா வந்து கொண்டிருந்ததாகவும்—

அவர் தலைமையகத்தை வந்தடைவதற்கு சில செக்கன்களுக்கு முன்னதாக குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## புதுடில்லியில் குண்டுவெடிப்பு

லண்டன், ஜூன் 26

புதுடில்லியில் உள்ள சர்வதேச விமான நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவில் சிறிய குண்டு ஒன்று வெடித்ததாக பி. பி. ஸி அறிவித்தது.

## சனியன்று ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடக்கு, கிழக்கில் அண்மையில் நடத்தப்பட்ட ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சையின் வினாத்தாள்களை மதிப்பிடும் வேலைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி (சனிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளன.

விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் வடக்குக் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தங்கியுள்ள தமிழ் ஆசிரியர்கள் ஈடுபடுவர். (உ-5)

# ஒருவழி விமான டிக்கெட்டுடன் போராளிகளை அனுப்புவோம்

### அமைச்சர் ப. சிதம்பரத்தின் இரண்டு கட்டத் திட்டம் இது

சென்னை, ஜூன் 26

தமிழகத்தில் உள்ள சகல ஈழப் போராளிகள் குழுக்களைச் சேர்ந்தவர்களையும் பாகுபாடு காட்டாமல் திருப்பி அனுப்ப வேண்டும். அவர்கள் விரும்புகின்ற நாட்டுக்கு ஒரு வழிப் பயணச்சீட்டுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

—இவ்வாறு மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தாம் தயாரித்துள்ள திட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாக 'இந்து' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஈழப் போராளிகளை வெளியேற்றுவதற்காகத் திரு சிதம்பரம் இரண்டு கட்டத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளாராம்.

அந்தத் திட்டத்தின் பிரகாரம்—

முதலாவது கட்டம் —

1983—1987 காலப்பகுதியில் செய்தது போல குறிப்பிட்ட சில இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு அகதிகளை அனுப்பி வைப்பதாகும்.

பின்னர் ஒவ்வொரு அகதியையும் ஆராய்ந்து அவரில் எவரிலாது சந்தேகம் இருப்பின் அவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும்.

இரண்டாவது கட்டமாக மாநிலத்திலிருக்கும் சகல இலங்கையர்களையும் குறிக்கப்பட்ட கால பகுதிக்குள் உள்ளூர் பொலிஸில் பதிவு செய்யுமாறு கோருவதாகும்.

இதன்படி பதிவு செய்யப்படாமல் இருக்கும் இலங்கைத் தமிழர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றலாம்.

இதேவேளை கரையோரக் காவல் நடவடிக்கையைப் பலப்படுத்த வேண்டும்.

சகல இலங்கைக் குழுக்களும் பாகுபாடு காட்டப்படாமல் திருப்பி அனுப்பப்பட வேண்டும். அவர்கள் விரும்புகின்ற இடத்துக்கு ஒரு வழி பயணச் சீட்டுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தற்போது அமுலில் இருக்கும் வெளிநாட்டவர் சட்டம் இந்த நடவடிக்கைக்குப் போதுமானது. இந்தச் சட்டத்துக்கு முரணாக நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசின் அதிகாரம் போதுமானது. (அ)

## கப்பலில் இருந்து பணம் எடுத்து வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

லங்கா சிறி கப்பலில் வந்த திரவப் பணத்தை எடுத்து வருவதற்காக நேற்று பருத்தித்துறை சென்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் வெறுங்கையுடன் திரும்பினர்.

லங்காசிறி கப்பல் திடீரென காங்கேசன் துறைமுகத்துக்குத் திரும்பிச் சென்றதே இதற்குக் காரணம்.

கப்பலில் கடமையில் இருந்த அதிகாரி ஒருவர் மாரடைப்பினால் மரணமானார் என்றும், அவரது சடலத்தை பலாலிக்கு அனுப்புவதற்காகவே கப்பல் காங்கேசன் துறைமுகத்துக்குச் சென்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## சமயாசமய, தற்காலிக ஊழியர் நிரந்தரமாவர்

அரச சேவையில் உள்ள அனைத்து சமயாசமய மற்றும் தற்காலிக ஊழியர்களும் நிரந்தரமாக்கப்பட உள்ளனர்.

உடனடியாக அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்து உள்ளது.

இம்முடிவு மாகாணசபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசு பொறுப்பேற்றுள்ள வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பொருந்தும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPECIAL ENGLISH
## விசேட ஆங்கில வகுப்பு
*An Integrated Course*

ஒருங்கிணைந்த கற்கை நெறி

பாடசாலை விலகியோருக்கும்,
தொழில் பார்ப்போருக்கும் உகந்தது

**ஆரம்பம்: 29 - 06 - 1991**
மு. ப. 9-30 a. m.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

விசேட குறிப்பு: ஜூன் 1990 இல் மேற்படி வகுப்பில் கற்ற மாணவர்கள் தொடர்ந்தும் கற்க உரிமையுடையர்.

மேலதிக விவரங்களுக்கு:

நிர்வாகி:
*NEW SCIENCE ACADEMY*
KANNATHIDDY, JAFFNA.
(சி-0178)



# கீன் கல்வி நிலையம்
திருநெல்வேலி.

## ஆண்டு - 11

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
"இலத்திரனியல்"
கணிதம் — திரு. வாமதேவன்
"வரைபடம்"
தமிழ் — புலவர் சிவா
சமூகக்கல்வி — திரு. ஜோசப்
ஆங்கிலம் — திரு. ஹரி
வர்த்தகம் — திரு. சிவகுமார்

**ஆரம்பம் 26 - 6 - 1991**
நேரம்: பிற்பகல் 2-30

ஆண்டுகள் 6, 7, 8, 9, 10 வகுப்புகள் நடைபெறுகின்றன. (சி/0146)



## கேள்வி விண்ணப்பம் கோரல்
யாழ். பல்கலைக்கழகம், இலங்கை

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை/மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்தியசாலை ஆகியவற்றால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படும் உரிமை கோரப்படாத பிரேதங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பிரேத சழிவு உறுப்புக்களை அகற்றுவதற்கும், அழிப்பதற்கும் தகுதி உடையவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் ஜூலை மாதம் 12ஆம் திகதி 10-30 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நிதியாளர், பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் நேரம் ஜூலை மாதம் 12 ஆம் திகதி முற்பகல் 11-00 மணி. கேள்வி விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் யூஜே/எவ்/எஸ்2/10/91 என்ற இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

**கூறுவிலைகள்
பின்வருமாறு அமைதல் வேண்டும்.**

1. யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிமை கோரப்படாத பிரேதம் ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
2. மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிமை கோரப்படாத பிரேதம் ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
3. திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பிரேத உறுப்புக்களை அகற்றுவதற்கும், அழிப்பதற்கும் பொதி ஒன்றுக்கான கட்டணம்.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.
[சி 0144]


# எந்த முதலமைச்சருக்கும் இல்லாத ஆபத்து எனக்கு இப்போது உண்டு!

## ஜெயலலிதா சொல்கிறார்

சென்னை, ஜூன் 26
முன்னர் பணிபுரிந்த முதலமைச்சர் எவருக்கும் இல்லாத ஆபத்து இப்போது எனக்கு மட்டுமே இருக்கிறது. அந்த அளவுக்கு இன்று தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மோசம் அடைந்துவிட்டது.

அ. தி. மு. க. அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் முதலமைச்சர் ஜெயலலிதா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப்போராளிகளால் சீர்குலைந்த சட்டம் - ஒழுங்கு விரைவில் செம்மை செய்யப்படும்.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களை யார், எவர் என்று கண்டறியும் புதிய நடவடிக்கையை மாநில அரசு விரைவில் அறிவிக்கும்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பற்றி மாநிலஅரசு அதிகம்பேசாது. ஆனால் செய்ய வேண்டியதை அரசு செய்யும்.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி முதல் தமிழகத்தில் உள்ள மலிவு விலை மதுக்கடைகள் மூடப்படும்.

மத்திய அமைச்சரவையில் சேரும்படி பிரதமர் நரசிம்மராவ் அழைப்பு அனுப்பினால் அ. தி. மு. க. அதனை ஏற்றுக் கொள்ளும்.

சட்டசபைக் கூட்டத்தின் பின்னர் புதுடில்லி சென்று மாநில நிலவரம் குறித்து பிரதமருடன் பேசவிருக்கின்றேன்.

மாநில அமைச்சரவை தற்போதைக்கு விஸ்தரிக்கப்படமாட்டாது.

சென்னைக் கடற்கரையில் அமைந்துள்ள எம். ஜி. ஆர். சமாதி மீண்டும் நல்ல முறையில் திருத்திக் கட்டப்படும்.

இப்படி முதலமைச்சர் ஜெயலலிதா சொன்னார். (ஈ-எ)

## கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட உலோகங்களைக் கொண்டு அந்த வாகனத்தின் "செவி" இலக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

கூட்டுப்படைகள் தலைமை அலுவலகக் குண்டுவெடிப்பு, ரஞ்சன் விஜேரத்னா கொலைக்குக் காரணமான குண்டுவெடிப்பு ஆகிய சம்பவங்கள் கொழும்பில் ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் இடம்பெற்றிருப்பதால், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைத் தளமும் இந்தப் பிரதேசத்திலேயே அமைந்திருக்கலாம் என்று நம்பப்படுவதாக விசாரணையாளர்கள் தெரிவித்தனர். [உ-எ]

### சமாதானப் பேச்சுகளில்
# பிரபா பங்குபற்ற வேண்டும் என்பது நிபந்தனையல்ல!

சமாதானப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை இலங்கை அரசு கைவிட்டு விட்டது.

அந்த நிபந்தனையை அரசு வற்புறுத்தவில்லை என்று ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் அண்மையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)


லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் சங்கம்
காங்கேசன்துறை
## விசேட பொதுக் கூட்டம்

இடம்: இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயம்
காலம்: 30 - 6 - 1991 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணிக்கு
உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

க. தருமநாயகம்,
தலைவர்

இணுவில்
25-6-1991. [4171]



1. Computer Programming In Basic Language
ஆரம்பம்: 29 - 06 - 1991
சனி, ஞாயிறு } 8-30 — 10-30

2. International Association of Book Keepers (LONDON)
FOUNDATION
INTER
FINAL
ஆரம்பம்: 29 - 06 - 1991
சனி, ஞாயிறு வகுப்புகள்

3. English Assistant Teachers
ஆரம்பம்: 26 - 06 - 1991
திங்கள், புதன், வெள்ளி

4. Pitman's Short-Hand Typing (LONDON)
ஆரம்பம்: 01 - 07 - 1991
வகுப்புகள் MONDAY to FRIDAY

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 ஆவது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-0183)



ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
## ENGLISH TEACHERS EXAM
போட்டிப் பரீட்சைக்கான
### விசேட பயிற்சி வகுப்புகள்
2 ஆவது பிரிவு ஆரம்பம்: 29 - 06 - 1991
9-00 a. m.

★ பல ஆசிரியர்களின் இணைந்த சேவை
★ வாராந்தம் 12 மணித்தியாலங்கள்
★ இலவச பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 150-00 (முழுப் பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:- நேரில்

*ASTAN* INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
இரத்தினம் [illegible]
[0173]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாக்கியம் குமாரசாமி

கரம்பன் கிழக்கைச் சேர்ந்தவரும், சுண்டிக்குளியில் வசித்தவருமான திருமதி கு. சிவபாக்கியம் 25-06-1991 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், யோகலிங்கம் (பிரான்ஸ்), அச்சலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சண்முகலிங்கம், செல்வநாதன் (இத்தாலி), சாந்தி, சசிகலா, சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-06-1991 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன என்பதை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ஆ. சவுந்தரராசன்
(மருமகன்)

இல: 18, விதானையார் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (17342)

## சிவப்பிரகாசம் குபேரன்
(குபேரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பண்டத்தரிப்பு)

சங்கானை பிரபல வர்த்தகர் நா. க. சிவப்பிரகாசம் அவர்களின் புத்திரன் குபேரன் (23-06-91) இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. சிவப்பிரகாசம்(N.K.S.)-பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும் வாசுதேவியின் அன்புக் கணவனும், ஜீவகுமார், கிஷோக்குமார், சபேஸ்குமார், ஜிமிலா, மிதிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி, கெங்காதேவி, மகேந்திரம், பாலகுமார் (சுவிர்ஸலாந்து), நாகேஸ்வரி, செல்வராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாதேவன் (ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை), பாலசுப்பிரமணியம் (தபால் அதிபர், கொழும்பு). தர்மகுலசிங்கம் (பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), தயாபரன் (அக்குறணை றான்ஸ்போட்), குணசித்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயகாந்தன், ஸ்ரீகாந்தன், விஜிதா, துஷானி, தர்சன், நிதர்ஷன், திவ்யா, கோபிகா, சாலினா, சஜீயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீணா, துஷாந்தன், தனுஷன் ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது பிறந்தகமான தங்கபவனத்தில் இன்று புதன்கிழமை [26-06-91] நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நா. க. சிவப்பிரகாசம் (N. K. S.)
க. பொ. சின்னத்தம்பி (வாமதேவன் - மச்சான்).

"தங்கபவனம்"
சிலம்புப் புளியடி,
சங்கானை.
(17123)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org